முருகப்பெருமான் துணை

**மகான் பெரியாழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.08.2022**, புதன்கிழமை

1. ஏழைக்கு இரங்கும் ஞானியே
ஏழ்மையை விரட்டும் ஞானியே
காலனையும் வென்று மக்களை
கலியினில் மீட்க வந்த தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் பெருமை கூறி
அவனியிலே சுபகிருது யாளி திங்கள்
அறிவிக்க மூவைந்து திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 15 நாள், 31.08.2022 புதன்கிழமை)
3. வாரமதில் அருளாசி தன்னை
வழங்குவேன் பெரியாழ்வார் யானும்
பாரதம் தொட்டு கலியுகம் தனில்
பண்பான ஞானவான்களை படைக்கவந்த
4. வந்தநல் அரங்க மகானின்
வல்லமையான ஞானவழிகளை
சிந்தை வைத்து கலியுகமக்கள்
செப்பிட தொடர்ந்து வருக
5. வருகவே மக்களிடை தெளிவும்
வளர்ச்சிகளும் சகல வகையும்
முருகப் பெருமான் அருளாற்றலாக
முழுமை ஞானமாக வந்தடையும்
6. அடையவே ஞானத்திருவடியாம்
அரங்கன் தரும் வேத நூலை
தடையற உலகமக்கள் பெற்று
தவசியின் வருகையாக ஏற்று
7. ஏற்றுமே வணங்கி வைத்து
எந்த தேசத்தில் இருந்தாலும்
உற்றதொரு இல்லில் பூசை
உயர்வாக வாசித்து செய்து வர
8. வருகவே இல்லில் அரங்கன்
வருகை சூட்சும வடிவில்
முருகப்பெருமானும் தந்து
மொழிகுவேன் ஞானக்குடியாக்கி
9. ஆக்கியே அந்தந்த இல்லமும்
அரங்கன் ஆசிபட செழிப்புற
ஆக்கமுடன் அவரவர் இருக்கின்ற
அந்தந்த தேசங்களும் வளர்ந்து

10. வளர்ந்து எந்த துறைவகையிலும்
வளர்ச்சி அபரிமிதமாகக் கண்டு
தளர்விலா ஞான பூமியாக
தரணியே மாற்றம் காணும்

11. காணுமே அரங்கன் அவதார
கட்டளையாக எங்கும் சன்மார்க்கம்
ஞானமாகி மாற்றம் நிகழ்த்தும்
நாட்டிய அருளாசி முற்றே

–சுபம்–